## வட மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களுக்கான அறிவித்தல்.

2021.12.01ம் திகதியிடப்பட்டு **www.np.gov.lk** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும், மற்றும் பத்திரிகைகள் மூலமும் வெளியிடப்பட்ட மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கு அமைய மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க விரும்பும் அலுவலர்களுக்கான மாவட்ட ரீதியான சேவை, 2021 டிசம்பர் மாதத்தில் பின்வரும் அட்டவணைக்கமைய, நடைபெறும்.

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 08.12.2021 | 10.00 – 2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு |
| 15.12.2021 | 10.00 – 2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா |
| 22.12.2021 | 10.00 – 2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார் |
| 29.12.2021 | 10.00 – 2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி |
| 2021 டிசம்பர் மாதத்துக்குள் சமர்ப்பிக்க உத்தேசிக்கும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மேன்முறையீடுகளை, இல 393/48, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாணப் பொதுச்சேவை அலுவலகத்தில் திங்கட் கிழமைகளில் கையளிக்க முடியும். | | |

2013.07.03ம் திகதியில் வெளியிடப்பட்ட 1817/30 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்குவிதிக்கோவையின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கமைவாக மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*சி.திருவாகரன்,*
செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
வட மாகாணம்.